**நவம்பர் – 18**

# TNPSC துளிகள்

- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது, மும்பையில் "புல்லியன் பிளேஸ் நடவடிக்கை" என்ற குறியீட்டுப் பெயரில் ஒரு பெரிய தங்கக் கடத்தல் மற்றும் உருக்கல் கும்பலைக் கண்டுபிடித்தது.
- பிரம்மபுத்திரா நதியில் நதிப் போக்குவரத்தை மேம்படுத்தவும், அதனைச் செயல் திறன் மிக்கதாகவும் மாற்ற இந்தியாவின் முதல் நவீன நதிப் படகு முனையம் என்பது கௌஹாத்தியில் திறக்கப்பட்டது.
- இந்தியா – பிரான்சு இடையிலான கருடா - 2025 என்ற இருதரப்பு விமானப் படைப் பயிற்சி பிரான்சில் நடைபெற்றது.
- போதைப்பொருள் தீவிரவாதிகளைக் குறி வைத்து கொக்கைன் கடத்தல் வலை அமைப்புகளைச் சீர்குலைக்க கரீபியன் மற்றும் தென் அமெரிக்காவில் சதர்ன் ஸ்பியர் நடவடிக்கை என்ற இராணுவப் பிரச்சாரத்தினை அமெரிக்கா தொடங்கியுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் பொது மாநாடு ஆனது, எகிப்தின் கலீத் எல்-எனானியை அதன் தலைமை இயக்குநராகத் தேர்ந்தெடுத்தது.
  - 2017 ஆம் ஆண்டு முதல் இந்தப் பதவியை வகித்து வரும் ஆட்ரே அசௌலேவினை அடுத்து அவர் பதவியேற்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஓசூர் விமான நிலையத்திற்கான தள அனுமதி





- தமிழக அரசானது, ஓசூரில் ஒரு விமான நிலையத்தை நிறுவுவதற்கான தள அனுமதி விண்ணப்பத்தினை பொது விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் சமர்ப்பித்து உள்ளது.

- பேரிகை மற்றும் பாகலூர் இடையே உள்ள சூளகிரி தாலுக்காவில் இந்த விமான நிலையம் அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- எதிர்கால விரிவாக்கத்திற்கான ஏற்பாடுகளுடன் ஆரம்பத்தில் இந்த விமான நிலையத்தில் ஒரு முனையம் மற்றும் இரண்டு ஓடுபாதைகள் அமைக்கப்படும்.
- இந்தப் பகுதியானது, HAL (இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்) கட்டுப்பாட்டின் கீழ் வருவதால், வான்வெளி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு பாதுகாப்புத் துறை அமைச்சகத்திடம் மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது.
- எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அங்கு பயணிகள் செயல்பாடுகள் தொடங்குவதற்கான சாத்தியத்துடன், ஆறு முதல் எட்டு மாதங்களில் தள அனுமதி கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## திருநர்கள் சுகாதாரம்

- இந்தியாவில் திருநர்கள் நலக் கொள்கையை அறிமுகப்படுத்திய மற்றும் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று திருநர்கள் நல வாரியத்தை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- இந்த வாரியத்திற்கு சமூக நலத்துறை அமைச்சர் தலைமை தாங்குவார்.
- ஏப்ரல் 15 ஆம் தேதியானது தற்போது மாநிலத்தில் திருர்கள் நல தினமாகக் கொண்டாடப் படுகிறது.
- சென்னையில் உள்ள இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, திருநர்கள் நல வாரியத்தின் ஆதரவுடன் 2008 ஆம் ஆண்டு பாலினத்தை உறுதிப்படுத்தும் அறுவை சிகிச்சைகளை வழங்கத் தொடங்கியது.
- இந்த முன்னெடுப்பானது, ஒரு மாநிலத்திற்கு குறைந்தது ஒரு அரசு மருத்துவமனையாவது அத்தகைய சேவைகளை வழங்க வலியுறுத்திய 2019 ஆம் ஆண்டு திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்திற்கு முன்னதாக மேற்கொள்ளப் பட்டது.
- 2018 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கான தேசிய சுகாதார இயக்கம், ஒரே தளத்தின் கீழ் பலதரப்பட்ட பராமரிப்புச் சேவை வழங்க பாலின வழிகாட்டுதல் மருத்துவ மனைகளை (GGCs) நிறுவியது.
- 2025 ஆம் ஆண்டிற்குள், எட்டு மாவட்டங்கள் GGC வசதிகளைக் கொண்டிருக்கும் என்ற நிலையில் அவை இலவசப் பாலின உறுதிப்படுத்தும் நடைமுறைகள் மற்றும் விரிவான திருநர் சுகாதாரப் பராமரிப்பை வழங்கும்.
- 2022 ஆம் ஆண்டில், பாலினத்தை உறுதிப்படுத்தும் அறுவை சிகிச்சைகள் மற்றும் ஹார்மோன் சிகிச்சை ஆகியவை முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டத்தில் (CMCHIS-PMJAY) ஒருங்கிணைக்கப்பட்டன.
- மருத்துவமனை நிதி ஒதுக்கீடுகள் மூலம் முன்னர் நிதியளிக்கப்பட்ட சேவைகள் தற்போது ஒருங்கிணைந்த இந்தியக் காப்பீட்டு நிறுவனத்துடன் ஐந்து ஆண்டு கொள்கையின் கீழ் (2022–2027) உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இதன் மூலம் உலகளாவிய சுகாதாரக் காப்பீட்டில் திருநர் பராமரிப்பை உள்ளடக்கிய முதல் தெற்காசிய நாடாக இந்தியா திகழ்கிறது.
- அணுகலை மேம்படுத்துவதற்காக, CMCHIS-PMJAY திட்டத்தின் கீழ் சேர்க்கைக்கான 72,000 ரூபாய் மதிப்பிலான வருடாந்திர வருமான வரம்பை மாநில அரசு நீக்கியது.
- திருநரின் பெயரைக் கொண்ட குடும்ப அட்டைக்கான தேவையையும் மாநில அரசு தள்ளுபடி செய்தது.

- சுகாதாரப் பராமரிப்புக்கான தடைகள் தவறான கருத்து, பாகுபாடு மற்றும் குடும்ப நிராகரிப்பு ஆகியவை உட்பட, வருமானத்திற்கு அப்பாற்பட்டதாக இருப்பதை இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## குடும்ப ஓய்வூதிய விதிகள்




- மத்திய அரசு ஊழியர்களின் குடும்பப் பதிவுகளில் மகளின் பெயர் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலத்துறை தெளிவு படுத்தியது.
- ஓய்வு அல்லது மகளின் திருமணத்திற்குப் பிறகு ஓய்வூதியத் தகுதி தொடர்பான சர்ச்சைகளைத் தடுக்க இந்த தெளிவுபடுத்தல் வெளியிடப்பட்டது.
- குடும்ப ஓய்வூதியத்திற்கான தகுதி, ஓய்வூதியதாரர் அல்லது ஏற்கனவே உள்ள குடும்ப

ஓய்வூதியதாரர் இறந்த பின்னரே, பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் ஆராயப்படும்.

- 2021 ஆம் ஆண்டு மத்திய அரசுப் பணிகள் (ஓய்வூதியம்) விதிகளின் 50வது விதி, மனைவி, குழந்தைகள், பெற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளியான உடன்பிறப்புகள் உள்ளிட்ட முழுமையான மற்றும் புதுப்பிக்கப்பட்ட குடும்ப விவரங்களைக் கோருகிறது.
- தகுதி வேறு காரணிகளாக இருந்தால், குடும்ப உறுப்பினரின் பெயர் முன்னதாகப் பதிவு செய்யப்படவில்லை என்பதற்காக மட்டுமே ஓய்வூதியக் கோரிக்கைகளை மறுக்க முடியாது.

## இந்தியாவின் காப்புரிமை தாக்கல் நிலைமை





- 64,000க்கும் மேற்பட்ட காப்புரிமைகளுடன் இந்தியா உலகின் 6வது பெரிய காப்புரிமைத் தாக்கல் செய்யும் நாடாக உள்ளது.
- இந்த காப்புரிமைகளில் சுமார் 55 சதவீதத்திற்கும் அதிகமானவை இந்தியக் கண்டு பிடிப்பாளர்களால் தாக்கல் செய்யப்படுகின்றன.
- ஆராய்ச்சி மற்றும் திட்ட நிறைவுக்காக என்று வெளிநாட்டு நிறுவனங்களை முன்னர் சார்ந்திருந்திருக்கும் நிலையிலிருந்து இது ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது.
- கடந்தப் பத்தாண்டுகளில் இந்தியா உலகளாவியப் புத்தாக்கக் குறியீட்டில் 81வது இடத்திலிருந்து 38வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

## டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு விதிகள், 2025


- இந்திய அரசானது 2023 ஆம் ஆண்டு DPDP சட்டத்தின் செயல்பாட்டினை நிறைவு செய்து, 2025 ஆம் ஆண்டு DPDP விதிகளை அறிவித்தது.
- டிஜிட்டல் ரீதியான தனிப்பட்ட தரவை பொறுப்புடன் பயன்படுத்துவதற்காக குடி மக்களை மையமாகக் கொண்ட மற்றும் புதுமைக்கு ஏற்ற கட்டமைப்பைச் சட்டம் மற்றும் விதிகள் உருவாக்குகின்றன.
- இது SARAL வடிவமைப்பு, அதாவது எளிமையான, அணுகக்கூடிய, ஏற்புடைய மற்றும்

செயல்படக்கூடிய வடிவமைப்பை பின்பற்றி தரவுச் செயலாக்க அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கான உரிமைகளுக்கான (தரவுகளுக்கு உரிமையானவர்கள்) கடமைகளை நிறுவுகிறது.

- ஒப்புதல் மற்றும் வெளிப்படைத்தன்மை, நோக்க வரம்பு, தரவுக் குறைப்பு, துல்லியம், சேமிப்பக வரம்பு, பாதுகாப்பு சார்ந்த விதிமுறைகள் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய ஏழு முக்கிய கொள்கைகள் கட்டமைப்பை வழிநடத்துகின்றன.
- இந்த விதிகள் தனிப்பட்ட தரவை அணுக, திருத்த, புதுப்பிக்க அல்லது அழிப்பதற்கான தனிநபர்களின் உரிமைகளை வலுப்படுத்துகின்றன என்பதோடு மேலும் இவை இதற்கான பிரதிநிதிகளை நியமிக்கவும் அனுமதிக்கின்றன.




## பெண் தொழிலாளர் வள இலக்கு – 2030




- இந்திய அரசானது, பெண் தொழிலாளர் வள பங்கேற்பு விகிதத்தை (FLFPR) 2024 ஆம் நிதியாண்டில் 41.7 சதவீதத்திலிருந்து 2030 ஆம் ஆண்டிற்குள் 55% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏற்பமைவு மிக்க மற்றும் தொலைதூர வேலை, சம ஊதியம், பாதுகாப்பான பணி இடங்கள், மலிவு விலையிலான குழந்தைப் பராமரிப்பு மற்றும் ஊதியம் இல்லாத

பராமரிப்புப் பணிகளுக்கு முறையான அங்கீகாரம் ஆகியவை இதில் அடங்கும்.


❖ முறைப்படுத்தப்பட்டு வருகின்ற பராமரிப்பு சார் பொருளாதாரம், பெரும்பாலும் பெண்களுக்கு மில்லியன் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

❖ இந்தத் துறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% முதலீடு செய்வது 11 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடும்.

❖ சமீபத்தியத் தரவு ஆனது FLFPR 34.1% (2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான வாராந்திர நிலை) மற்றும் 33.4% (2025 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் காலாண்டில்) எனக் காட்டுகிறது.

❖ ஷ்ரம் சக்தி நிதி 2025 வரைவு, இந்தியாவின் மக்கள்தொகை நன்மையைப் பயன்படுத்த பெண்களுக்கு ஒழுக்கமான வேலைவாய்ப்புக்கான அணுகலை விரிவுபடுத்துவதை எடுத்துக்காட்டுகிறது.

## தேசிய புலம்பெயர்வுக் கணக்கெடுப்பு 2026–27




❖ புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் (MoSPI) ஆனது 2026 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2027 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் தேசியப் புலம் பெயர்வு கணக்கெடுப்பை நடத்த உள்ளது.

❖ இந்தக் கணக்கெடுப்பு ஆனது, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களையும் உள்ளடக்கும்.

❖ இது புலம்பெயர்வு விகிதங்கள், குறுகிய கால மற்றும் பருவகாலப் புலம்பெயர்வு, புலம் பெயர்வுக்கான காரணங்கள், புலம்பெயர்ந்தோரின் வேலைவாய்ப்பு மற்றும் வருமான விவரங்கள் மற்றும் சொந்த இடங்களுக்கு திரும்பும் புலம்பெயர்வு பற்றிய தரவுகளைச் சேகரிக்கும்.

❖ குறுகிய காலப் புலம்பெயர்ந்தோர் என்பது வேலைவாய்ப்பு அல்லது வேலை தேடலுக்காக கடந்த ஆண்டில் பதினைந்து நாட்கள் முதல் ஆறு மாதங்கள் வரை தங்கள் வழக்கமான வசிப்பிடத்திலிருந்து விலகி இருந்த ஒரு நபராக வரையறுக்கப் படுகிறது.

❖ நவீனப் புலம்பெயர்வுப் போக்குகளை மிகவும் துல்லியமாக பதிவு செய்ய, முழு குடும்பத்தினையும் விட தனிப்பட்டப் புலம்பெயர்வில் இந்தக் கணக்கெடுப்பு கவனம்

செலுத்தும்.

- இந்தியா முழுவதும் உள்நாட்டு புலம்பெயர்வு குறித்த புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளை வழங்குவதன் மூலம் இந்தத் தரவு நகர்ப்புற மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம், சமூகப் பாதுகாப்பு மற்றும் பிராந்தியத் திட்டமிடல் ஆகியவற்றை ஆதரிக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஒற்றை நிலை பயணத் தீர்வு அமைப்பு





- வளைகுடா ஒத்துழைப்புச் சபையானது (GCC), உறுப்பினர் நாடுகளுக்கு இடையேயான இயக்கத்தை சீராக்க ஒற்றை நிலைப் பயணத் தீர்வு அமைப்பை அங்கீகரித்தது.
- ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பஹ்ரைன் ஆகியவை 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கி இந்த முன்னெடுப்பினை சோதனை வழியாக மேற்கொள்ளும்.
- இந்த அமைப்பு ஆனது குடிமக்கள் ஒரே சோதனைச் சாவடியில் குடியேற்றம், சுங்கம் மற்றும் பாதுகாப்பு சோதனைகளை நிறைவு செய்ய அனுமதிக்கிறது.
- இதன் மூலம் பயணிகள் தரையிறங்கி, பொருட்களைச் சேகரித்து மற்றும் கூடுதல் நடைமுறைகள் இல்லாமல் வெளியேற இயலும்.
- ஒரு பகிரப்பட்ட மின்னணுத் தளம் உறுப்பினர் நாடுகளை நடைமுறைகளை ஒருங்கிணைக்கவும் தரவைப் பகிரவும் உதவுகிறது.
- இந்தச் செயல்முறை வெற்றி பெற்றால், இந்த அமைப்பு ஆனது சவுதி அரேபியா, குவைத், ஓமன் மற்றும் கத்தார் உள்ளிட்ட ஆறு GCC நாடுகளுக்கும் விரிவுபடுத்தப் படும்.

# பொருளாதாரச் செய்திகள்

## மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம்


- இந்தியாவின் மொத்த விலைக் குறியீடு (WPI) ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் -1.21% ஆகக் குறைந்தது.

- உணவுப் பொருட்களின் விலைகள் 5%, முதன்மைப் பொருட்கள் 6.18% மற்றும் எரிபொருள் மற்றும் மின்சாரம் 2.55% குறைந்துள்ளன.
- உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பணவீக்கம் 1.54% ஆகக் குறைந்தது.
- நுகர்வோர் அளவிலான விலை மாற்றங்களை அளவிடும் CPI போலல்லாமல், WPI மொத்த விலைகளைக் கண்காணிக்கிறது.
- சில்லறைப் பணவீக்கமும் அக்டோபர் மாதத்தில் 0.25% ஆகக் குறைந்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் குவாண்டம் சீரொளிக் கற்றை




- இந்தியாவின் முதல் சிறிய உயர் துல்லியத் தன்மை கொண்ட டையோடு லேசரை (சீரோளிக் கற்றை) தேசிய குவாண்டம் திட்டத்தின் (NQM) ஆதரவு பெற்ற பிரீனிஷ்க் பிரைவேட் லிமிடெட் உருவாக்கியுள்ளது.

- குவாண்டம் மறைகுறியாக்கப்பட்ட தகவல் தொடர்பு, குவாண்டம் கணினியியல் மற்றும் மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சிக்காக இந்த லேசர் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது நிலையான வெளியீடு, பரந்த அலைநீள வரம்பு, குறைந்த மின் நுகர்வு மற்றும் ஆய்வகங்கள் மற்றும் தொழில்துறை அமைப்புகளில் எளிதாக ஒருங்கிணைக்கும் வசதியை வழங்குகிறது.
- இந்த கண்டுபிடிப்புக்கு DST-நிதி பிரயாஸ், NMICPS, I-HUB குவாண்டம் தொழில்நுட்ப அறக்கட்டளை, IISER புனே, IIT டெல்லி, BITS BioCyTiH மற்றும் TBI-KIET ஆகியவை ஆதரவளித்தன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஜப்பானிய சிட்டுப் பருந்து




- சென்னையின் அடையாறு முகத்துவாரத்தில் ஒரு ஜப்பானிய சிட்டுப் பருந்து (டாக்கிஸ்பிஸா குலாரிஸ்) தென்பட்டது.
- சீனா, ஜப்பான், கொரியா மற்றும் சைபீரியா உள்ளிட்ட கிழக்கு ஆசியாவிலும், தென் கிழக்கு ஆசியாவில் குளிர்காலத்திலும் ஜப்பானிய சிட்டுப் பருந்து இனங்கள் காணப் படுகின்றன.
- இந்தியாவிற்குள், இது முன்னர் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளிலிருந்து ஒரு வலசை போகும் மற்றும் குளிர்கால வலசைப் பறவையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## உலகளாவிய பருவநிலை-சுகாதார தகவமைப்புத் திட்டம்

- பெலெம் சுகாதார செயல் திட்டம் (BHAP) ஆனது COP30 மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- இது குறிப்பாக ஆரோக்கியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட முதல் சர்வதேச பருவநிலை தகவமைப்பு கட்டமைப்பாகும்.
- இந்தத் திட்டமானது கண்காணிப்பு அமைப்புகள், சான்றுகள் சார்ந்த கொள்கைகள் மற்றும் சுகாதாரக் கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிய 60 செயல் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- BHAP செயல்படுத்தலை ஆதரிக்க 300 மில்லியன் டாலர் முதலீடு அறிவிக்கப்பட்டது.
- இந்தக் கட்டமைப்பு ஆனது வெப்ப அலைகள், நோய்க் கிருமிகளால் பரவும் நோய்கள் மற்றும் உணவு மற்றும் நீர் அமைப்புகளின் சீர்குலைவு உள்ளிட்ட பருவநிலை

தொடர்பான சுகாதார அபாயங்களை நிவர்த்தி செய்கிறது.

- BHAP என்பது தகவமைப்பு மிக்க சுகாதார அமைப்புகளை ஊக்குவிக்கின்ற COP30 செயல்திட்டத்தின் குறிக்கோள் 16 என்பதன் ஒரு பகுதியாகும்.
- துரிதப்படுத்தப்பட்டுள்ள பருவநிலை மாற்றத்தின் சுகாதாரத் தாக்கங்கள், 2050 ஆம் ஆண்டிற்குள் சுமார் 14.5–15.6 மில்லியன் உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடும் (உலக வங்கியின் படி).
- சுகாதாரத்திற்கு 0.5–4% நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சுகாதாரத்திற்கான உலகளாவியப் பருவநிலை தகவமைப்பு நிதி குறைவாக உள்ளது.
- BHAP ஆனது 80க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பெரும்பாலும் உரிமையியல் சமூகம் மற்றும் ஐ.நா. நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, பருவநிலை தகவமைப்பு கொண்ட சுகாதார அமைப்புகளை உருவாக்குதல், நிதி மற்றும் தொழில்நுட்பத்தைத் திரட்டுதல் மற்றும் சுகாதாரப் பராமரிப்பில் உமிழ்வைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அசாமில் வெளிர் தோல் கொண்ட நீர்ப்பாம்பு





- முதல் வெளிர் தோல் கொண்ட (அல்பினோ) ஆசிய நீர்ப்பாம்பு (ஃபோலியா பிஸ்கேட்டர்) அசாம் மாநில உயிரியல் பூங்கா மற்றும் தாவரவியல் பூங்காவில் தென்பட்டது.
- தோல் வெளிர்தல் (அல்பினிசம்) என்பது வன வாழ் பாம்புகளில் மிகவும் அரிதான மரபணு பண்பாகும்.
- மெலனின் நிறமி இல்லாத இந்த நிலை, வெளிர் நிறம் மற்றும் பெரும்பாலும் செந்நிறக் கண்களுக்கு வழிவகுக்கிறது.

- ❖ அல்பினிசம் அல்லது லூசிசம் (நிறமியின் பகுதி இழப்பு) உள்ளிட்ட நிறமி இழப்புகளுக்கான (ஹைப்போபிக்மென்டேஷன்) முந்தையப் பதிவுகள் குஜராத், மகாராஷ்டிரா, மிசோரம், மேற்கு வங்காளம் மற்றும் நேபாளத்தின் தனுஷா மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் 2025




- ❖ தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) ஆனது 243 இடங்களில் 202 இடங்களுடன் தீர்க்கமான பெரும்பான்மையைப் பெற்றது.
- ❖ இதில் பாஜக 89 இடங்களை வென்ற அதே நேரத்தில் ஜனதா தளம் (ஐக்கிய) NDA கூட்டணியின் கீழ் 85 இடங்களை வென்றது.
- ❖ காங்கிரஸ் வெறும் 6 இடங்களை மட்டுமே வென்றது.
- ❖ மொத்த வாக்குகளில் NDA 46.52% வாக்குகளைப் பெற்ற அதே நேரத்தில் மகாகட்பந்தன் 37.64% வாக்குகளைப் பெற்றது.
- ❖ 66.9 சதவீதத்தினை எட்டிய வாக்காளர் வாக்குப்பதிவு பீகாரின் வரலாற்றில் மிக உயர்ந்ததாகும்.
- ❖ அடுத்தப் பதவிக் காலத்திற்கும் நிதீஷ் குமார் முதலமைச்சராகத் தொடர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ மைதிலி தாக்கூர் அவரது 25 வது வயதில் பீகாரின் இளம் MLA ஆக பொறுப்பேற்று வரலாற்றை உருவாக்க உள்ளார்.
- ❖ போஜ்பூர் மாவட்டத்தில் உள்ள சந்தேஷ் தொகுதியின் ராதா சரண் ஷா வெறும் 27 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

## FRBM சட்டத் திருத்தம் - மேகாலயா

- ❖ மேகாலயா அரசானது நிதிப் பொறுப்பு மற்றும் நிதி ஒதுக்கீட்டு மேலாண்மை (FRBM) சட்டத்தின் கீழ் அதன் நிதிப் பற்றாக்குறை உச்ச வரம்பை மொத்த மாநில உள்நாட்டு

உற்பத்தியில் (GSDP) 3 சதவீதத்திலிருந்து 3.5% ஆக உயர்த்தியது.

- இந்த மாற்றமானது, உள்கட்டமைப்பு, நலன்புரி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அதிக கடன் வாங்க அனுமதிக்கிறது.
- D குரூப் பதவிகளில் உள்ள வழக்கமான சாதாரண தொழிலாளர்களுக்கு 50% இட ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டு மேகாலயா அமைச்சர் மாவட்ட நிறுவன சேவை விதிகளின் 6(D)வது விதியின் இந்த ஒதுக்கீட்டை செயல்படுத்துகிறது.
- மாநில நுகர்வோர் தகராறு தீர்வு ஆணையத்திற்கான புதிய சேவை விதிகள் தன்னாட்சிப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய அனுமதிக்கின்றன.




## இதரச் செய்திகள்

### புவி சார் குறியீடு – லெப்சா இசைக்கருவிகள்




- சிக்கிமின் இரண்டு பாரம்பரிய லெப்சா இசைக்கருவிகளான துங்புக் மற்றும் பும்டோங் புளிட் ஆகியவற்றிற்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டது.

- புது டெல்லியில் நடைபெற்ற முதல் பழங்குடியின வணிக மாநாட்டின் போது இந்தப் புவிசார் குறியீடு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- துங்புக் என்பது ஒரு மூன்று சரங்களைக் கொண்ட இசைக்கருவி, மற்றும் பும்டோங் புளிட் என்பது ஒரு மூங்கிலால் ஆன புல்லாங்குழல் ஆகும்.
- இந்த இரண்டு கருவிகளும் லெப்சா நாட்டுப்புற இசையுடன் ஒருங்கிணைந்தவை என்பதோடு மேலும் கலாச்சார மற்றும் ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★